# மின்வாரிய ஊழியர்களே! ஒன்றுபட்டு நிற்போம்!!
# உரக்க குரல் கொடுத்து... உரிமையைப் பாதுகாப்போம்!



**போராட்ட வீரர்களே! தளபதிகளே!!**
**தோழர்களே, தோழியர்களே!...**
**அன்பு சகோதர – சகோதரிகளே!...**

அனைவருக்கும் வணக்கம்,

2016 டிசம்பர் 22ல் மின்வாரிய ஊழியர்களின் கோரிக்கைகளாம், ஊதிய உயர்வு, கம்பியாளருக்கும், வணிக உதவியாளருக்கும் சமச்சீரான பதவி உயர்வு, மஸ்தூர் பணிக்காலத்தை அனுபவகாலமாக கணக்கில் கொள்ளல், கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு பணி அனுபவ காலத்தை குறைத்தல், உதவிப் பொறியாளர்களுக்கு, பதிவறை எழுத்தருக்கும் பதவி உயர்வு வழங்குதல், ஒப்பந்த தொழிலாளர்கள், பகுதி நேர ஊழியர்களின் கோரிக்கைகளை முன்வைத்து காத்திருக்கும் போராட்டத்தை நடத்தி, சாதனைகள் பலபடைத்த மின்ஊழியர் மத்திய அமைப்பின் போர்ப்படை தளபதிகள், போராட்ட வீரர்களுக்கு கரம் கூப்பி, சிரம்தாழ்த்தி வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

காத்திருக்கும் போராட்டத்தின் கோரிக்கைள், கலந்து கொண்டோரின் எண்ணிக்கை, கட்டுப்பாட்டோடு நடத்திய விதம், அடைந்த பலன்களை தொழிலாளர் நலன்காக்கும், ஒற்றுமையை விரும்பும் மாற்று சங்கத்தாரும் மானசீகமாக பாராட்டியதை காண முடிந்தது.

தொழிலாளர்களை வேறுபடுத்தி, ஒற்றுமைக்கு உலைவைத்து அதையே சுயநல வளர்ச்சிக்கு பயன்படுத்தும் ஒற்றர்கள் அபத்தமான வார்த்தைகளை அள்ளிவீசி, அதற்கெதிராக போராட்ட களம் அமைக்க போகின்றார்களாம்.

## களப்பணியில் வேலை திறமையை உறுதிபடுத்திடும் ஊழியர்கள்

ஒற்றுமைக்கு உலைவைப்போர், அள்ளிவீசிய அபத்தங்களில் ஒன்று களப்பணியில் வேலைத் திறமையை உறுதிப்படுத்தி, மக்களுக்கு சிறப்பான சேவையை அளித்திடவே களஉதவியாளர் பதவிக்கு NTC., NAC (I.T.I) -யும் மின்பாதை ஆய்வாளருக்கு எஸ்.எஸ்.எல்.சி கல்வித் தகுதியையும் நிர்ணயித்த பின்னரே, மக்கள் சேவை மலர்ந்ததாக அள்ளி வீசியிருக்கின்றார்கள்.

நிர்ணயிக்கப்பட்ட NTC., NAC (I.T.I)-யையும், மின்பாதை ஆய்வாளருக்கு எஸ்.எஸ்.எல்.சி - மூலம் மக்கள் சேவையை அளிக்க முடியவில்லை என்பதனால் தான் கல்வித்தகுதி குறைவான ஒப்பந்த தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தி, காடு மேடுகளில், இரவு பகலில், கொட்டும் மழையில் அடிக்கும் வெயிலில், குறைந்த கூலியில் ஒப்பந்த தொழிலாளர்கள் என்ற உழைப்பு பட்டாளத்தை பணிக்கு அமர்த்தி பணியை செய்ய வைத்ததால் தான் வேலை திறமை உறுதிப்படுத்தப்பட்டு மக்கள் சேவையை, மகத்தான சேவையாக மாற்றி இருக்கிறது என்பது தானே உண்மை.

## இயற்கை சீற்ற பாதிப்பை சீரமைத்த உழைப்பாளிகள்

தானே, வார்தா புயலிலும், சென்னையில் பாய்ந்த பெருவெள்ளத்திலும் ஒப்பந்த தொழிலாளர்கள், மஸ்தூராக மாறிய ஊழியர்களின் பணி தான் சிறப்பான பணி என்பதை ஒற்றர்களால் கூட மறுக்க முடியுமா? மறைக்க முயலலாமா? தினம் தினம் உன்னோடு இணைந்து பணியாற்றும் ஊழியருக்கு துரோகம் செய்ய முயற்சிக்கலாமா? அவர்களின் பணியை, திறமையை மதிக்க வேண்டாமா?

மின்வாரியத்தில் இன்று இருக்கும் பணியின் தன்மையில் மின்வாரியத்தை காப்பாற்ற NAC, NTC, ITI. எஸ்.எஸ்.எல்.சி-யால் மட்டும் முடியாது என்பதை உணர்ந்து தானே இன்றைக்கும் மின்வாரியத்தின் பணிகள் ஒப்பந்த தொழிலாளர்கள் கைப்பட்டால் தான் முடியும் என்பதை உணர்ந்து ஒப்பந்த தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்தப்படுகிறது என்பதை எட்டப்பர்களால் கூட மறுக்க முடியுமா?

## சமச்சீரற்ற களப்பிரிவு பதவி உயர்வு

மின்வாரியத்தில் களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வில் கள உதவியாளராக சேர்ந்த தேதியைத் தான் அடிப்படையாகக் கொண்டு முதன்மைப் பட்டியலும், பதவி உயர்வும் அளித்திட வேண்டும் என்பது மின்ஊழியர் மத்திய அமைப்பின் அழுத்தமான வாதம்.அதைத்தான் மின்வாரியமும், கம்பியாளருக்கும், வணிக உதவியாளருக்கும் சமச்சீரான பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற ஆலோசனையில் அளித்துள்ளது.

கண்டதையெல்லாம் பிதற்றும் பிதற்றல்வாதிகள் கள உதவியாளராக பணியில் சேர்ந்த தேதியை கணக்கில் கொண்டு பணிக்காலத்தை கணக்கிட வேண்டும் என்று தனது போராட்டத்தின் மூலமாக பெற்றுவிட்டதாக ஒரு புறமும், கள உதவியாளர் முதன்மையை அடிப்படையாக வைத்து முதன்மை பட்டியலும், பதவி உயர்வும் அளிக்க வாரியம் குழந்தைத் தனமாக முன்வடிவம் கொடுத்ததாக மறுபுறமும் எல்லாம் தெரிந்த ஏகாம்பரம் போல் பிதற்றுவது சரிதானா?.

ஒரு பக்கத்தில் கள உதவியாளர் பணியில் சேர்ந்த தேதியை கணக்கில் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுவதும், இன்னொரு பக்கத்தில் கள உதவியாளராக சேர்ந்த தேதியை கணக்கில் கொள்ளப்படும் என்று வாரியம் கொடுப்பது குழந்தைத்தனம் என்று பிதற்றுவது சுயநினைவில் தானா? அல்லது சுய ஆதாயத்திற்காகவா? காலமும், வாரியமும் தான் முடிவு செய்ய வேண்டும்.

## மஸ்தூர் பணிக்காலத்தை திரையிட்டு மறைக்கலாமா?

மின்வாரிய நிர்வாகப் பிரிவில் அரசியல் ஆதிக்கமும், சுயபலனும் எதிர்பார்த்து தானே பத்தாண்டுகள் ஒப்பந்த தொழிலாளியாக அதன் பின்னர் பல ஆண்டுகள் மஸ்தூராக வாரியத்தின் உயர்வுக்கு பாடுபட்டு பணியாற்றிய மஸ்தூர் பணிக்காலத்தை கணக்கில் கொள்ளக் கூடாது என்று ஓராண்டு காலத்தில் மூன்று முறை உத்தரவு வழங்கியவர்களே இன்றைக்கு அதை மாற்றி மஸ்தூர் பணிக்காலத்தை கணக்கில் கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்ததில் இருந்தே, சில அபிலாஷைகளுக்கு இறையாகித்தான் மஸ்தூர் பணிக்காலத்தை எடுக்கக் கூடாது என தவறான உத்தரவை பிறப்பித்திருக்கிறார்கள் என்பது தானே உண்மை அதை எங்களால் உணர முடிகிறது.

எட்டப்பர்களின் வாதத்தில் காலித் கமிட்டியின் போது சில காசு பெற்று விட்டார்களாம். அதனால் இவர்கள் சன்மானத்தை கொடுத்து காரியத்தை சாதிப்பது சரியானது என்று வாதிடுவார்களாம் அது மட்டுமல்ல மின்வாரிய வேலை வாய்ப்பை கடைச்சரக்காக்கி ஆதாயம் தேட

முயல்வது அவர்கள் தானே தவிர மத்திய அமைப்பு எந்தவித ஆதாயத்தையும் எதிர்பார்க்காமல், மின்வாரியத்தில் பல ஆண்டுகள் வாரியத்தின் உயர்வுக்கு பாடுபடும் ஒப்பந்த தொழிலாளிகளை கொண்டும், வேலை வாய்ப்பைத் தேடித்தரும் அலுவலகத்தில் காத்திருப்போர்களை கொண்டு நிரப்பும் போது வயது வரம்புகளை அகற்றுதல், அப்பரண்டீஸ்களுக்கு முன்னுரிமை கொடுத்தல் போன்ற உரிமைகளுக்கு குரல் கொடுத்து பணி நியமனம் செய்ய வைப்பது தான் மின்ஊழியர் மத்திய அமைப்பு பணியாக உள்ளது.

## ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரமும் - ஒப்பந்தமும்.

களஉதவியாளர் பதவிக்கு NTC,NAC,(ITI), என்று கல்வித்தகுதி நிர்ணயிக்கப்பட்ட போதிலும் அவர்களைக் கொண்டு மட்டும் வாரியப்பணிகளை எதிர்கொள்ள முடியவில்லை என்பதனால் ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்தும், அவ்வாறு பணி நியமனம் செய்கின்ற காலத்தில் வாரியத்தின் நிதிநிலைமை சரியில்லாமல் இருந்ததனாலும், வாரிய வரலாற்றில் தினக்கூலியாக ஒப்பந்த தொழிலாளியாக பணியாற்றிவர்களை களஉதவியாளராகத்தான் பணி நியமனம் செய்ததை மாற்றி நீண்ட நாட்களுக்கு முன்னர் வாரியத்திலிருந்து அகற்றிய மஸ்தூர் பதவியை புதுப்பித்து, கள உதவியாளரிலிருந்து அடுத்த பதவி உயர்வுக்கு ஐந்தாண்டுகள் பணி செய்திட வேண்டும் என தொழிலாளருக்கு துரோகம் விளைவிக்கக் கூடிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி மஸ்தூர் என்ற பதவியை திணித்து தான் வரலாறு அந்த துரோக ஒப்பந்தத்திலிருந்து விலகி நின்றது தான் மின் ஊழியர் மத்திய அமைப்பு. ஆனால் வரலாற்றை மறைத்து,தொழில்நுட்பம் அல்லாத பணிகளை செய்வதற்கே, மஸ்தூர் பதவியை உருவாக்கியதுப்போல துரோகத்தனமான வாதத்தை முன்வைக்கலாமா?

## வேலைபளு ஒப்பந்தமும் - மஸ்தூர் பணியும்

2014-இல் ஏற்பட்ட ஒப்பத்தத்திலும், பிரிவு அலுவலகங்களுக்கும், துணை மின் நிலையங்களுக்கும் பதவிகளை அனுமதிக்கும் போது களஉதவியாளர்/மஸ்தூர் என்று தானே ஒப்பந்தமும் உத்தரவும் வழங்கப்பட்டிருக்கிறது. துணை மின்நிலையங்கள், காற்றாலை போன்ற இடங்களில் முறைப்பணி உட்பட மஸ்தூர்கள் பணியாற்றுகிறார்கள் என்பது சிலருக்கு புரியவில்லையா? அல்லது கல்வித்தகுதி உடையவர்கள், கல்வித்தகுதி குறைந்தவர்கள் என்ற வேறுபாட்டை திணிக்கும் வெறியா? மஸ்தூர்கள் பணியை வாரியம் நிர்ணயித்த பின்னர் இல்லை என்று சொல்ல நீ யார்?

களஉதவியாளர் பதவிக்கு NAC, NTC,(ITI), என்று நிர்ணயிக்கப்பட்ட பின்னரும் வாரியத்தின் பணித்தன்மையை கணக்கில் கொண்டு 25,000க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளிகளின் பணி அனுபவம் கல்வித் தகுதிக்கு இணையானது என்பது மட்டுமல்ல அதற்கும் மேலானது என்பதால் தான் அவர்களை (காலித் கமிட்டி மூலமும், சமவேலைக்கு சம ஊதியம் மூலமும்), களஉதவியாளர் களாகத்தான் பணியில் நியமிக்கப்பட்டது என்பது வரலாறு. அந்த வரலாற்றை மாற்றித்தான் 2005 - 2007 இல் 25,000க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களை மஸ்தூர்களாக நியமிப்போம். என்ற நிலையை வாரியம் ஒப்பந்தத்தின் மூலம் திணித்தது. அந்த ஒப்பந்தத்திலும் மின் ஊழியர் மத்திய அமைப்பு விலகியே நின்றது.

வாரிய வரலாற்றின் அடிப்படையில் ஒப்பந்த தொழிலாளிகள் களஉதவியாளர்களாக நியமிக்கப்படுவதற்கு பதிலாக மஸ்தூர் என்ற புதிய இனத்தை தோற்றுவித்து மஸ்தூராக பணி நிரந்தரம் செய்து அந்த தொழிலாளிக்கு துரோகத்தை அரங்கேற்றியது. அந்த துரோகத்திற்கு பரிகாரமாகத்தான் மஸ்தூர்களை களஉதவியாளர்களாகக் நியமித்தார்களே தவிர, ஐக்கியம் செப்புவது போல் சட்டத்தை மீறிய செயலோ, நீதிமன்றத்தை ஏமாற்றிய செயலோ அல்ல என்பதை பித்தம் தலைக்கேரியவர்கள் உணர்ந்தால் சரி.

ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு மூலம் களஉதவியாளராக பதவி உயர்வு அளித்ததே சலுகை, சட்டத்திற்கு விரோதம் என்ற வார்த்தைகளை வெளியிடுவது மஸ்தூர்களுக்கு பதவி உயர்வே அளிக்கக் கூடாது என்ற கீழ்த்தரமான எண்ணத்தின் வெளிப்பாடு அல்லவா? இது உழைப்பை அவமதிக்கும் செயல் அல்லவா? இதை தொழிலாளி வர்க்கம் அனுமதிக்குமா?

## களஉதவியாளர் பயிற்சியும் - மத்திய அமைப்பும்

தமிழக மின் வாரியத்தில் வாரிசுக்கு வேலை அளிக்கின்ற போது, களஉதவியாளர் (பயிற்சி), அலுவலக உதவியாளர் (பயிற்சி), என்ற புதிய இனத்தை அறிமுகப்படுத்தியபோதே பள்ளம் தோண்டுவதற்கும், கம்பம் நடுவதற்கும் கம்பி இழுப்பதற்கும், அலுவலக கோப்புகளை நகர்த்துவதற்கும் பயிற்சி ஏன் என்று முழங்கியவர்கள்தான் செங்கொடி இயக்கத்தைச் சார்ந்தவர்கள். பயிற்சி என்ற இனத்தை அறிமுகப்படுத்திய போதே ஒன்றுபட்டு எதிர்த்து இருந்தால் பயிற்சி காலத்திற்கு முடிவினை கட்டியிருக்க முடியும் இருப்பினும் திணிக்கப்பட்ட பயிற்சி காலத்தை அகற்றிட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கொண்டே, பயிற்சி காலத்திற்கு அளிக்கும் தொகையை அந்த பதவிக்குரிய சம்பளமாக வழங்கிட வேண்டும். என்று வற்புறுத்தி வெற்றி பெற்ற அமைப்பு மின் ஊழியர் மத்திய அமைப்பு.

மின்வாரியத்தில் ஒரு காலகட்டத்தில் களஉதவியாளர் பயிற்சியாக, தொழிற்கல்வி பயின்றவர்களை பணிக்கு அமர்த்திய போது நுகர்வோரின் நலன் கருதி வெவ்வேறு மின்திட்டங்களுக்கு பிரித்து வழங்கிய போதிலும் களஉதவியாளரில் இருந்து கம்பியாளர் பதவி உயர்வை வழங்கச் செய்து அதனால் ஏற்பட்ட காலிப்பணி இடங்களில் அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு ஊர் மாற்றத்தை பெற்றுத்தந்தது மின் ஊழியர் மத்திய அமைப்பு.

## காலிபணியிடங்களில் ஒப்பந்த தொழிலாளிகளும் - ஐடிஐ படித்தவர்களும்

தொழிலாளிகளை பிளவுபடுத்தி பார்ப்பதையே வாடிக்கையாகக் கொண்ட ஐக்கியம் பொய்யான வாதங்களை முன் வைப்பதிலும் சளைத்தவர்கள் அல்ல. அதாவது நீதிபதி காலித்தீர்ப்பு மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்பு நடை முறைப்படுத்தி ஒப்பந்த தொழிலாளிகள் களஉதவியாளர்களாக பணி நியமனம் செய்யும் போது, அடிப்படைச் சம்பளம் அளித்தாகவும், ITI படித்தவர்களுக்கு தொகுப்பூதியம், பயிற்சி என்று பாரபட்சம் காட்டியதாகவும் பம்மாத்து வார்த்தைகளை உதிர்க்கலாமா?

வரலாற்றை திரித்து கூறும் வாடிக்கை யாளரே உண்மை நிலை, என்ன என்பதை உணர்வீரா? தினக்கூலித் தொழிலாளி பணி நிரந்தரம், 1987 இல் ITI படித்தவர்களை களஉதவியாளராக நியமித்த போதும் 1989இல் ITI பயின்றவர்களை களஉதவியாளராக நியமித்த போதும் அவர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தை தானே வழங்கினார்கள். உண்மையை திரித்து கூறலாமா?

வாரியம் ஒரு காலகட்டத்தில் தொகுப்பூதியம் என்பதை அமலாக்கி அதை மஸ்தூர்களுக்கும், தொழிற்கல்வி பயின்றவர்களுக்கும் தொகுப்பூதியம் அளித்தது என்பது தானே உண்மை. ஏதோ ITI படித்தவர்களுக்கு மட்டும்ந்தான் தொகுப்பூதியம் வழங்குவதாக முன் வைத்து வேறுபாட்டை வளர்க்கலாமா? பல ஆண்டுகளாக ஒப்பந்த தொழிலாளியாக மின் வாரியத்தில் பணியாற்றி தொழிற்சங்கங்களின் அழுத்தமான முறையீட்டுக்கு பின்னர் களஉதவியாளராக பணி நியமனம் செய்வதற்கு பதிலாக மஸ்தூராக பணி நியமனம் செய்தவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் பொருத்துவதும், மின்வாரியத்தில் புதியதாக பணிக்கு அமர்த்தும் போது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு எந்த பதவியில் நியமனம் செய்கின்றார்களோ அதற்குரிய சம்பளத்தை தொகுப்பூதியமாக வழங்குவதையும் ஒன்றாக இணைத்து பார்க்கலாமா?

நீதிபதி காலித் அவர்கள் ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரப்படுத்துவது சம்மந்தமாக ஒரு ஆலோசனை வழங்கிய போது தொழிற்சங்கங்கள் பணி நிரந்தரத்திற்காக கொடுத்த பட்டியல் 18006. அதை அவர்கள் முழுவதையும் ஒரே காலத்தில் பணி நிரந்தரம் செய்வதற்கு பதிலாக தீர்ப்பு வழங்கிய காலத்திற்கு முன்பாக 7000 தொழிற்கல்வி பயின்றவர்களை வாரியத்தில் பணிநியமனம் செய்துள்ளதால் அதற்கு சமமான 7000 ஒப்பந்த தொழிலாளர்கள் இரண்டு தவனையில் பணி நிரந்தரம் செய்வதோடு, மீதமுள்ள ஒப்பந்த தொழிலாளர்களையும் பணிநிரந்தரத்தின் போது 1:1 என்ற விகிதாச்சாரத்தில் பணிநிரந்தரம் செய்து பட்டியல் முடிக்க வேண்டும். என்று ஆலோசனை வழங்கினாரே தவிர மின்வாரியத்தில் களஉதவியாளருக்கு தேர்வு செய்யும் போது 1:1 என்ற விகிதாச் சாரத்தை பின்பற்ற வேண்டும் என்று காலீத் அவர்களும் சொல்ல வில்லை. வாரியமும் உத்தரவாக வெளியிடவில்லை.

பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்து தொழிலாளர்களை வேறுபடுத்தி பார்ப்பவர்கள் தான் 1:1 நிர்ணயித்து விட்டார்கள் என்றும் அந்த அடிப்படையில் ITI படித்தவர்களை பணிநியமனம் செய்திருந்தால் அவர்கள் பதவி உயர்வு பெற்றிருப்பார்கள் என்று பிறக்காத குழந்தைக்கு பெயர் வைக்கும் நிகழ்ச்சியை அரங்கேற்றி தனது கொள்ளை வியாபாரத்தை நடத்த நினைக்கலாமா?

மின்வாரிய பணியில் பணியாற்றி நிரந்தரமான ஒப்பந்த ஊழியர்களையும் மின்வாரியத்தில் காலடியே வைக்காதவர்களை வரிசைப்பட்டியலில் முதன்மையாக வைத்து பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று பம்மாத்து பாடலாமா? பொருந்தாத கோரிக்கைய முன்வைத்து பணியிலே சேராதவர்களுக்கு, பணியில் சேர்ந்து பணியாற்றி கொண்டிருக்கும் தொழிலாளிக்கு முன்பாக முதன்மை பட்டியலில் முன்வைக்க வேண்டும் என்ற பொருந்தாத வாதத்தை முன் வைத்தால் உங்களுக்கு தான் முதுகெலும்பு இல்லாமல் போய்விடும். வாரிய பணியில் சேர்ந்த தேதியை ஆதாரமாக கொண்டு தான் முதன்மை பட்டியலும் பதவி உயர்வும் இருக்க வேண்டும் என்ற நியாமான கோரிக்கை நாங்கள் வைக்க கல்வி தகுதியை அடிப்படையாக கொண்டு முதன்மை பட்டியலும் பதவி உயர்வும் என்ற பொருந்தாத வாதத்தை முன்வைத்தால் அதை பார்த்து வாய்பொத்தி இருப்பவர்கள் அல்லர் மத்திய அமைப்பை சார்ந்தவர்கள்.

## களப்பிரிவில் கல்வித் தகுதியும் - பதவி உயர்வும்

தமிழக மின்வாரியத்தின் பணித்தன்மையான கம்பம் நடுவது, கம்பி இழுப்பது, கேபிள்களை புதைப்பது, போன்ற பணித் தன்மைகளை கணக்கில் கொண்டே கல்வி பயின்றவர்கள், குறைவான கல்வி உள்ளவர்கள், போன்றோர்களை பணிக்கு அமர்த்துவதும், அவர்களுடைய பணி அனுபவத்தை கணக்கில் கொண்டு உயர் மட்டம் வரை பதவி உயர்வு வழங்குகின்ற வகையில் தான் பணிவிதிகளும், பணிவிதிகளில் மாற்றங்களும் செய்யப்பட்டு வருகின்றன.

மின்வாரியத்தின் பணித்தன்மை, மாறாத வரையில் இந்த நிலை தொடர்வதை எந்த கொம்பனாலும் மாற்ற முடியாது என்பது தான் இன்றைய நிலை இதைத் தான் மின்ஊழியர் மத்திய அமைப்பும் ஓங்கி குரல் கொடுத்து அமல்படுத்த முயற்சிக்கிறது. இது ஏதோ வாரிய விதிகளுக்கு புறம்பாக செய்ய சொல்லி வற்புறுத்துவதும் அதை வாரியம் வேடிக்கை பார்த்ததாக பிதற்றலாமா. வாரியமும், தொழிற்கல்வி பயின்று மின் வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களும் இதை உணர்ந்து தான் உள்ளனர். ஆனால் பிழப்பை நடத்துவதற்கே ஆண்டாண்டு காலமாக பின்பற்றப்பட்டு வரும் கொள்கையை மாற்றிடுவோம் வா? என்று அழைப்பதெல்லாம் ஊழியர்கள் மத்தியில் பிளவை உருவாக்குமே தவிர, வேறொன்றும் செய்திடாது என்பது தான் இதுவரை அனுபவம் தந்த பாடமாகும்.

களப்பிரிவில் கம்பியாளரும், வணிக உதவியாளரும் பணியாற்றுகின்ற போது வணிக உதவியாளர் இரண்டாண்டுகளில் பதவி உயர்வு பெறுவதும், அதே நாளில் கம்பியாளராக பணியேற்றவர்கள் 13 ஆண்டுகளுக்கு மேலும் அடுத்த பதவி உயர்வுக்கு காத்திருக்க வேண்டும் என்ற சமச்சீரற்ற பதவி உயர்வை தொழிற்சங்கங்கள் குறிப்பிட அதை வாரியமும் ஏற்று இரு பதவிகளுக்கும் சமச்சீரான பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கும் வகையில் சூப்பர் நியூமரரி பதவிகளை உருவாக்க வாரியமும் தொழிற்சங்கங்களும் ஒன்றுபட்டு நிற்கும் போது அதற்காக ஒப்பந்தம் கண்டு முறைப்படுத்திட முயலும் போது அதை தடுக்க நினைக்கும் வக்கர புத்தியை என்னென்று சொல்வது. இவர்களும் சேர்ந்து இதற்கு துணையயாக நிற்பதற்கு பதிலாக அதை தடுக்க நினைப்பது என்பது தான் சிறுபிள்ளைத்தனமாக குறுக்குபுத்தி உடையவர்கள் என்பதை உணர்த்துவதாக அமையாதா? இந்த ஏற்பாட்டைக் கூட மின்வாரியம் ஒப்பந்தத்தின் மூலம்தான் செய்ய நினைக்கின்ற போது, மின்வாரியம் ஏதோ சட்டத்திற்கு புறம்பாக யாருடைய முதலீட்டிலோ உருவான தனியார் கம்பெனி என்று பிதற்றுவது எல்லாம் தொழிலாளிகளுக்கு விரோதமாக உள்ளதை படம் பிடித்து காட்டாதா?.

பதவி உயர்வற்று இருக்கும் கம்பியாளர்களில் மஸ்தூர்களிலிருந்தும், ஐடிஐ படித்தவர்களும் உள்ளதை உணர்ந்து தான் பதவி உயர்வில் உள்ள தேக்க நிலையை கலைய சூப்பர் நியூமரரி மின்பாதை ஆய்வாளர் பதவியை உருவாக்க வேண்டும் என்று மின்ஊழியர் மத்திய அமைப்பு வாதாட சூப்பர் நியூமரரி மின்பாதை ஆய்வாளர் பதவியையே அனுமதிக்கக் கூடாது அது ஒப்பந்தத்திற்கு புறம்பானது என்று வாதாடலாமா? சூப்பர் நியூமரரி பதவி உயர்வு ஐடிஐ படித்தவர்களுக்கும் தானே என்பதை கூட உணர்ந்து பார்க்க முடியாதது சரிதானா?. ஐடிஐ படித்து பதவி உயர்வில் தேக்க நிலையில் இருக்கும் கம்பியாளருக்கு செய்யும் துரோகமல்லவா?.

களப்பிரிவு பதவி உயர்வுக்கு தகுதியும் திறமையும் இருப்பவர்களக்கே பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று வாரியப்பணி விதிகளில் உள்ளதாகவும், அதை வாரியம் மீறுவதாகவும், அனுபவம் பெற்ற கல்வித்தகுதி குறைவானவர்களையும், தொழிற்கல்வி பயின்றவர்களையும் ஒன்றாக இணைத்து பார்ப்பது நியாயமில்லை என்றும் சிலர் செப்புவது சரிதானா? மின்சாரவாரியத்தில் களப்பிரிவில் பதவி உயர்வு வழங்குவதற்கு, பணி அனுபவமும், முதன்மையும் இருந்தாலே போதும் என்று தானே பணி விதிகள் சொல்லுகின்றது. ஒரு கம்பியாளருக்கு பதவி உயர்வு பெற S.S.L.C முடித்து எட்டாண்டு காலம் குறிப்பிட்ட பணியில் பணி அனுபவம் இருந்தாலே போதும் என்று தானே வாரியப் பணி விதியில் கூறுகின்றது. கல்வி தகுதியை தளர்த்தியே பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகின்றது என்பதைக் கூட புரிந்து கொள்ளாமல், அல்லது புரிந்தும் ஒரு சாராரின் மீது உள்ள வக்கரபுத்தியை வெளிப்படுத்தும் விதமாக வாதாடுவது அழகாகுமா?

## பணிநியமனங்களில் மத்திய அமைப்பு

தமிழக மின் வாரியத்தில் துவக்க நிலை பதவிகளை நேரடி தேர்வின் மூலம் நிரப்பிட முயற்சி எடுப்பதாகவும், அதை ஏதோ ஒரு காரணத்தை காட்டி நீதிமன்றத்தில் வழக்கைதொடுத்து தடையை உருவாக்கி, ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் என்ற கோரிக்கை வைப்பதையே மத்திய அமைப்பு வாடிக்கையாக வைத்துள்ளதாகவும், மத்திய அமைப்பு கொடுக்கும் பட்டியலில் உள்ளவர்கள் தான் மின்வாரியத்தில் வேலை பெறவேண்டும் என்றால் மத்திய அமைப்பின் முதலீட்டில் உருவான நிருவனமா? என்றெல்லாம் ஒரு அமைப்பு ஒப்பாரிவைக்கிறது.

தமிழக மின் வாரியத்தில் காலியிடங்களை நிரப்பிட வேண்டும் என்ற போராட்டத்தில் முன் நிற்பது மத்திய அமைப்பு. அதே நேரத்தில் உதவிப்பொறியாளர் பதவிக்கு உள்முகத் தேர்வு மூலம், தேர்வு செய்வதற்கு கூட எழுத்து தேர்வு என்று இதுவரை இல்லாத ஒரு முறையை கொண்டு வந்தபோது அதை எதிர்த்து நீதிமன்றம் சென்றது மத்திய அமைப்பு, களஉதவியாளர் நேரடியாக பணிநியமனம் செய்யும் போது ஒருமுறை வயது வரம்பை தளர்த்திய மின் வாரியம், அடுத்த தேர்வின் போது தளர்த்தலை தவிர்த்ததனால் மின் ஊழியர் மத்திய

அமைப்பு நீதிமன்றம் சென்று உரிமையை நிலை நாட்டியது. உதவிப்பொறியாளர், தொழில் நுட்ப உதவியாளர், களஉதவியாளர் போன்ற பதவிகளுக்கு பணிநியமனம் செய்யும் போது மின்வாரியத்தில் அப்ரண்டீஸ்களாக பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்றும், நேரடி தேர்வில் அரசியல், பணபலம், விளையாடக்கூடாது என்பதற்காக நேர்மையை நிலைநாட்ட, நீதிமன்றத்தை மின் ஊழியர் மத்திய அமைப்பு நாடியதே தவிர வாரியம் வேலைத் தேடித்தரும் அலுவலகம் மூலமாக ஊழியர்களை பணிக்கு அமர்த்த முயற்சிக்கும் போது அதை தடுத்து விட்டு, ஒப்பந்த தொழிலாளிகளை பணிக்கு அமர்த்த வேண்டும் என்று யாசகம் கேட்க வேண்டிய அவசியம் மின் ஊழியர் மத்திய அமைப்புக்கு எழுந்ததில்லை, அவசியமும் இல்லை.

## உழைப்பு சுரண்டலுக்கு எதிராக மத்திய அமைப்பு

சிஐடியூ-வுடன் இணைந்த தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு நவீன தாராளமயக் கொள்கை அமலாக்கலின் தாக்கத்தினால் நிரந்தர தொழிலாளர்கள் வெட்டப்பட்டு அங்கு ஒப்பந்த தினக்கூலி, என்.எம்.ஆர், அவுட் சோர்சிங், தொழிலாளிகளை பணிக்கமர்த்தி உழைப்புச்சுரண்டலை அரங்கேற்றுவதற்கு எதிராக உழைப்புச்சுரண்டலுக்கு உட்பட்டவர்களை ஒன்று திரட்டி சுரண்டலுக்கு எதிராக போராட வேண்டும் என்ற சிஐடியூவின் தாரக மந்திரத்தை கடந்த 46 ஆண்டுகாலமாக பின்பற்றி உழைப்புச்சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருவது மின் ஊழியர் மத்திய அமைப்பு. அதனால் பலனடைந்தவர்கள் தான் இன்று மின்வாரியத்தை பாதுகாக்கும் காவலராக உள்ளார்கள் என்பது மயக்கத்தில் உள்ள உங்களைப் போன்றவர்களுக்கு எப்படி புரியும்.

தமிழக மின்வாரியத்தில் ஐக்கிய, அதன் பின்னர் தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம் என்ற பெயரில் இயங்கும் சங்கமும் H.M.Sல் இணைந்துள்ளதாக கூறுகின்றார்கள். அகில இந்திய ரீதியில் இயங்குகின்ற HMS தொழிற்சங்கம் அனைத்து காலி இடங்களையும் நிரப்பிடுக . நவீன தாராளமயக் கொள்கையினால் உருவாகும் ஒப்பந்த தொழிலாளர்களை அணிதிரட்டிடுக என்று தானே கூறுகின்றது. அதன் அடிப்படையில் HMS வோடு இணைந்துள்ள ஐக்கிய தொழிலாளர் சங்கமும், ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பக்க பலமாகத்தானே நிற்க வேண்டும். ஒப்பந்த, தினக்கூலி தொழிலாளிகளை பார்க்கும் போது அலர்ஜி வரலாமா? தமிழக மின்வாரியத்தில் 15,000க்கும் மேற்பட்டு காலிபணி இடங்களாக உள்ள களஉதவியாளர் பதவிகளை நிரப்பிட வேண்டும். அவ்வாறு நிரப்பிடும் போது மின்வாரியத்தில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களையும், பின்னர் ITI பயின்றவர்களை கொண்டு நிரப்பிட வேண்டும் என்று மத்திய அமைப்பு அழுத்தமாக வாதிட்ட போது களப்பணி இடங்களில் 6,000 காலிப்பணி இடங்களை மட்டும் நிரப்பிட வேண்டுமென்று குறுக்கு சால் ஓட்டி குறுக்கு புத்தியை காட்டியவர்கள் ஐக்கியசங்கத்தின் தலைமை தானே.

HMS சொல்வதை அமலாக்காத போது, HMS தொழிற்சங்கத்தை, தன்னை பேச்சு வார்த்தைக்கு அழைக்க வேண்டும், என்பதற்கு மட்டும் பயன்படுத்திவிட்டு, மற்றவற்றை காற்றிலே பறக்க விடுவது என்றாகிவிடாதா? அது இணைப்பிற்கு செய்யும் துரோகம் அல்லவா?.

HMS வோடு இணைந்துள்ள ஐக்கிய தொழிலாளர் சங்கமும், HMS -ன் தாரக மந்திரத்தை அமலாக்கும் விதமாக ஒப்பந்த தொழிலாளர்களையும் பட்டியல் தந்து நிரந்தரப்படுத்த, வாதாட தடையேதும் இருக்க முடியாது. HMS போர்வையில் இயங்கும் ஐக்கிய தொழிற்சங்கம் அதற்கு தயாரா?

தமிழக மின்வாரியத்தில் இன்றுள்ள பணிநிலைமைகளில் கல்வியறிவு குறைந்தவர்களும் தொழிற் கல்வி பயின்றவர்களின் சேவையும் தேவை அதே போல் ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் பெற்ற தேதியும் தொழிற் கல்வி பயின்றவர்கள் வாரியப் பணியில் சேர்ந்த தேதியை கணக்கில் கொண்டு முதன்மைப் பட்டியல் பதவி உயர்வு என்ற நிலைபாட்டை அடைய ஒன்றுபட்டு நிற்போம்!. வேறுபடுத்தலையும் வேறுபாட்டையும் மறப்போம்!. உழைப்புச் சுரண்டலை ஒழிப்போம்!.

## டிசம்பர் 22 போராட்ட வெற்றி

மத்திய அமைப்பு டிசம்பர் 22ல் நடத்திய இயக்கத்தில் மின்வாரியத்தில் உள்ள களஉதவியாளர் காலிப்பணி இடங்களை முழுமையாக நிரப்பிட வேண்டும். அதற்கு மின் வாரியத்தில் பணியாற்றுகின்ற ஒப்பந்த தொழிலாளிகளையும், தொழிற்கல்வி பயின்று, வேலையற்றோரையும், கொண்டு காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும் என்ற வாதத்தை வலுவாக முன்வைத்தோம். தொழிற்கல்வி பயின்றவர்களை பணிக்கமர்த்த முயற்சிக்கின்ற நிலையில் அப்பரண்டீஸ்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றோம் என்ற பதிலை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து வழக்கை முடித்து பணியமர்த்த வேண்டும் என்று வாதிட்டு நீதிமன்றத்திற்கு முன் உள்ள வழக்கை முடிவுக்கு கொண்டு வந்து, அவர்களை பணி நியமனம் செய்வது சம்மந்தமாகவும், ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங்கண்டு சம வேலைக்கு சமஊதியமும், பணி நிரந்தரமும் செய்திட வேண்டும் என்பதை வலியுறுத்தி வாரியமும் இவைகளை பரிசீலிப்பதாக வாக்குறுதியை பெறச் செய்தோம் என்பதை உணர வேண்டியவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். என்பது தானே உண்மை நிலை.

தமிழக மின் வாரியத்தில் பதவி உயர்வு, இடமாற்றம், ஊர்மாற்றம் போன்றவற்றில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது வாரிய விதிகளுக்குட்பட்டே அவைகள் வழங்கப்பட வேண்டும். என்று டிசம்பர் 22, போராட்ட வீச்சோடு வலியுறுத்திய பின்னரே இன்றைக்கு பதவி உயர்வு, இடமாற்றம், ஊர்மாற்றம் போன்றவைகள் வாரிய விதிகளுக்குட்பட்டே வழங்கிட வேண்டும் என்று உத்தரவை பிறப்பிக்க வைத்த பின்னர் யாரோ சாட்டையை சுழற்றி மின் வாரியத்தை காப்பாற்ற போகின்றார்களாம் இது அவர்களுக்கே வெளிச்சம்.

## தொழிற் சங்க ஒற்றுமைக்காக மத்திய அமைப்பு

தொழிலாளர் தோழர்களே!

தமிழக மின் வாரியத்தில் மேலோங்கியுள்ள பிரச்சனைகளான ஊதிய உயர்வு, காலிப்பணி இடங்களை நிரப்புதல், புதிய பென்சன் திட்டத்தை கைவிட்டு பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்து, மின்துறை பொதுத் துறையாக பாதுகாப்பது போன்ற ஸ்தூலமான கோரிக்கைகளை வென்றடைய மின்வாரியத்தில் தொழிலாளர், தொழிற்சங்க ஒற்றுமை என்பது இன்றைய காலத்தின் கட்டாயமாக உள்ள போது, ஒப்பந்த தொழிலாளர்கள், தொழில்நுட்பம் பயின்றவர்கள் கல்வியறிவு பெற்றவர்கள், குறைந்த கல்வியறிவு உடையவர்கள் என்ற வேறுபாட்டை வளர்க்காமல் ஒன்றுபட்டு நிற்போம்! ஓரக்க குரல் கொடுத்து உரிமைகளை காப்போம்!! என்பது தான் இன்றைய தாரக மந்திரமாக அமைய வேண்டும்.

இத்தகைய தாரக மந்திரத்தை மின் ஊழியர் மத்திய அமைப்பு ஏற்று பணியாற்ற தயாராக உள்ளது. இதைத்தான் மற்றவர்களிடமும் அடலேறுகளிடமும் எதிர் பார்க்கின்றது. தொழிலாளர் ஐக்கிய தலைமையும் இதைத்தானே செய்ய வேண்டும்.

CITU COTEE

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

அங்கீகாரம் பெற்றது.
27 மகுதி தெரு, சேப்பாக்கம், சென்னை 5